DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.50/2022**

**2025-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 10- ம் நாள் வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 1-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 1 | தொழில் | - | தனியார் வேலை |
| பெயர் | - | கோகிலா | வட்டம் | - | வால்பாறை |
| க/பெ | - | சக்திவேல் | சமயம் | - | |
| கிராமம் | - | மாணிக்கா என்சி | வயது | - | 40/2025 |
| சாதி | - | | | | |

**<u>10-10-2025</u>**

**(1, 2 எதிரிகள் ஆஜர்)**

(எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்த குவிமுச பிரிவு 311-ன் கீழான மனு Ecrlmp No. 898/2025 -ல் அனுமதிக்கப்பட்டு சாட்சி திரும்ப அழைத்து விசாரிக்கப்பட்டார்)

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

நான் முதல் விசாரணையில் 03-04-2021-ம் தேதி இரவு 10.30 மணியளவில் வீட்டில் இருந்தபோது வாடி வெளியே உன்னை வெட்டாமல் விடமாட்டேன் என்றுசொல்லியுள்ள விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நாங்கள் வெளியே எழுந்துபோய் கதவை நீக்குவதற்குள் கதவை உடைத்துவிட்டார்கள் லைட்டு எல்லாம் அடித்து உடைத்துவிட்டார்கள் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். தர்ஷன் என்ற பையன் பாத்ரூம்பில் ஒழிந்து இருந்ததாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எதிரியிடம் கேட்டுக்கொண்டிருந்தபோது தர்ஷன் பின்னால் வந்து பின்மண்டையிலும், திரும்பி பார்க்கும் போது முன் மண்டையிலும் அடித்துவிட்டார் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எனக்கு மொத்தம் தலையில் எத்தனை காயங்கள் ஏற்பட்டது என்றால் 2 காயங்கள் ஏற்பட்டது. அப்படித்தான் போலீசார் விசாரணையிலும் மருத்துவரிடமும் சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம், சொல்லியுள்ளேன். ஆஜர் 1-ம் எதிரி கல்லை எடுத்து தொடையில் போட்டதாகவும் அதனால் எனக்கு ரத்தகட்டு ஏற்பட்டதாகவும் போலீசார் விசாரணையிலும் மருத்துவரிடமும் சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம், சொல்லியுள்ளேன். 2-வது எதிரி கட்டையை வைத்து உடம்பு முழுவதும் அடித்தாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எனது அக்கா மகள் அனுசியாவியம் அடித்து அதில் ரத்தக்கட்டு ஏற்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அனுசியா மருத்துவ சிகிச்சை பெற்றுக்கொண்டாரா என்றால் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டார். எப்போது சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்றால் சம்பவதிற்கு அடுத்த நாள் சிகிச்சை எடுத்துக்கொண்டார். இந்த விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா

என்றால் அடிபட்ட விவரத்தை சொன்னேன் சிகிச்சை எடுத்துக்கொண்டதை சொல்லவில்லை. நான் சொன்னவாறு யாரும் அடிக்கவில்லை என்றாலும் அவ்வாறு உண்மையிலேயே அடிபட்டு இருந்தால் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றிருப்பார் என்றாலும் சரியல்ல. தர்ஷன் எனது முடியை பிடித்து கல்லில் முட்டியதாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். கல்லில் முட்டியதில் எனக்கு காயம் ஏற்பட்டதா என்றால் ஆமாம் காயம் ஏற்பட்டது. இதனை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனாஎன்றால் சொல்லியுள்ளேன். தர்ஷன் கஞ்சாவும் தண்ணீயும்அடித்திருந்தார் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.போலீசாருக்கு ராஜம்மாள் அடிக்க பயன்படுத்தியதாக சொல்லியுள்ள கட்டையை நான் தான் அடையாளம் காட்டினேனா என்றால் ஆமாம். எத்தனை நாட்கள் கழித்து போலீசாரிடம் அடையாளம் காட்டினேன் என்றால் நான் மருத்துவமனையில் இருந்ததால் எனது அண்ணன் அடையாளம் காட்டினார். எனது அண்ணன் எங்கு குடியிருக்கிறார் என்றால் கோயம்புத்தூரில் குடியிருக்கிறார். சம்பவத்தின்போது எனது அண்ணன் உடன் இருந்தாரா என்றால் இல்லை சம்பவத்தை கேள்விப்பட்டு அன்றைய தினம் இரவு பொள்ளாச்சி மருத்துவமனையில் வந்து என்னை பார்த்தார். எனது அண்ணன் சம்பவத்தின்போது இல்லாததால் எந்த கட்டை, கம்மால் தாக்கினார்கள் என்று அவருக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. எனது அண்ணனுக்கு நேரடியாக தெரியும் என்ற விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். ராஜம்மாள் கட்டையால் அடித்தார் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். தர்ஷன் கட்டையை எடுத்துக்கொண்டு ஓடிவிட்டார் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அந்த கட்டை என்ன ஆனது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அந்த கட்டை நீதிமன்றத்தில் இல்லை என்றால் சரிதான். எதிரிகள் மீது ஏற்கனவே வால்பாறை காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அதில் விசாரணை செய்தார்கள் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்னோ என்றால் சொல்லியுள்ளேன். நான் ஏற்கனவே கொடுத்த புகாரில் யார் யாரை போலீசார் அழைத்து விசாரித்தார்கள் என்றால் நிஷாவையும் அவரது கணவர் சுரேஷ்குமாரையும் அழைத்து விசாரித்தார்கள். இந்த விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். எங்கள் வீட்டு அருகே அ.சா.4 முருகன்,
அ.சா.5 செல்வி, அ.சா.6 ஆகாஷ் மற்றும் பிரகாஷ், சந்திரசேகர், ஆறுமுகம், சுப்பு ஆகியோர்கள் குடியிருக்கிறார்கள் என்றால் சரிதான். நான் சொன்னது போல சம்பவம் நடந்திருந்தால் இவர்கள் அனைவருக்கும் நன்றாக தெரிந்திருக்கும் என்றால் சரிதான். நான் வால்பாறை அரசு மருத்துவமனைக்கு சென்ற சிறிது நேரத்திலிலேயே 1-ம் எதிரியின் கணவர் சுரேஷ்குமார் என்னை பார்ப்பதற்கு மருத்துவமனை வந்தார் என்றால் சரியல்ல. எதிரிகள் மீது ஏன் அடிக்கடி புகார் கொடுத்தேன் என்றால் எதிரிகள் என்னிடம் பணம் கேட்டார்கள் நான் கொடுக்காததால் அடிக்கடி என்னை அசிங்கமாக திட்டினார்கள் அதனால் புகார் கொடுத்தேன். நான் ஏற்கனவே எதிரிகள் மீது கொடுத்த புகார் அனைத்தும் இந்த விவரத்திற்காகத்தான் கொடுத்துள்ளேன் என்றால் ஆமாம். அதுமட்டுமல்ல 1-ம் எதிரியின் கணவர் எனக்கு பாலியல் தொல்லை கொடுத்தார் அதற்காகவும் புகார் கொடுத்துள்ளேன். இந்த விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எங்கள் பகுதிகளில் உள்ள சந்திரசேகர் என்பவரின் மனைவி மாரியம்மாள் என்பவர் என் மீது சமூகம் நீதிமன்றத்தில் புகார் கொடுத்து அந்தபுகாரின் இலவச சட்ட உதவி மையத்தில் என்னை அழைத்து விசாரித்தார்களா என்றால் ஆமாம். நானும் அவர்கள் மீது புகார் கொடுத்தேன். அந்த புகாரில் நாங்கள் சமாதானமாக சென்றுவிட்டோம் என்றால் சரிதான். அந்த புகார் எதற்காக

மாரியம்மாள் கொடுத்தார் என்றால் எங்கள் வீட்டு அருகில் கால்வாய் சண்டை வந்தது அதற்காக கொடுத்தார். நான் சொல்லுவது போல் புகார் கொடுக்கவில்லை என்றாலும் நான் சந்திரசேகரனுடன் திருமணம் கடந்த உறவில் இருப்பதால் அவர் அவரது குடும்பத்தை சரியாக கவனிக்கவில்லை என்ற காரணத்திற்காக என் மீது மாரியம்மாள் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. 1-ம் எதிரியின் கணவர் சுரேஷ்குமார்ருடனும் திருமணம் கடந்த உறவு இருந்ததால் சுரேஷ்குமார் அவரது குடும்பத்தை சரியாக கவனிக்காததாலும் அதனை எதிரிகள் என்னை தட்டிக்கேட்டதால் கோபம் கொண்டு நான் எதிரிகளுக்கு எதிராக தவறாக பல புகார் கொடுத்து எதிரிகளுக்கு மனஉளைச்சல் ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. போலீசார் நான் கொடுத்தபுகாரை முறையாக விசாரணை செய்ததில் என் மீது தவறு இருந்ததால்தான் என்னை எச்சரித்து புகாரை முடித்து வைத்தார்கள் என்றால் சரியல்ல. அந்த புகாரில் எதிரிகளைத்தான் எச்சரித்துஅனுப்பினார்கள் நான் குடியிருக்கும் லயன் வீட்டில் முதல் வீடு காலியாக உள்ளது என்றால் சரிதான். சம்பவதினத்தன்று இரவு நானும், 1-ம் எதிரியின் கணவர் சுரேஷ்குமாரும் அந்த காலியாக இருந்த வீட்டில் தனிமையில் பேசிக்கொண்டிருந்ததை தர்ஷன் பார்த்தால் தர்ஷன் அவரது அப்பாவான சுரேஷ்குமாரை தட்டிக்கேட்டார் என்றால் சரியல்ல. தர்ஷன் சத்தம் போட்டதால் அங்கிருந்த மற்ற நபர்களுக்கு எங்களுக்குள் உள்ள தவறான உறவு தெரிந்துவிடும் என்பதால் நான் அங்கிருந்து ஓடினேன் என்றால் சரியல்ல. அந்த நேரத்தில் தர்ஷனுக்கும், சுரேஷ்குமாருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டதால் நான் திரும்பவும் அந்த இடத்திற்கு வந்து தர்ஷனை நான் அடித்தேன் என்றால் சரியல்ல. தர்ஷனை நான் அடிக்கும் போது சுரேஷ்குமார் என்னைதடுத்தபோது நானாக கீழே விழுந்ததில் எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. கீழே விழுந்த நான் மீண்டும் தர்ஷனை கம்பு எடுத்து அடிக்க முயற்சிசெய்யும் போது சுரேஷ்குமார் என்னை வேகமாக தள்ளிவிட்டதால் அதில் நான் துணிதொவைக்கும் கல்லில் விழுந்து காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. இந்த உண்மை விவரம் அங்கிருந்த முருகன், ஆகாஷ், செல்வி ஆகியோர்களுக்கு தெரிந்ததால்தான் அவர்கள் எனக்கு ஆதரவாக நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கவில்லை என்றால் சரியல்ல. மருத்துவரிடம் நான் 1 நபர் அடித்ததாக சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. மூவரும் அடித்ததாகதான் சொல்லியுள்ளேன். சுரேஷ்குமார் தடுத்ததில் எனக்கு காயம் ஏற்பட்டதால்தான் ஒரு நபர் தாக்கியதாக மருத்துவரிடம் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கும் 1-ம் எதிரியின் கணவர் சுரேஷ்குமாருக்கும் இருந்த திருமணம் கடந்த உறவு வெளியில் உள்ளவர்களுக்கு தெரிந்துவிடும் என்பதற்காக அதனை திசை திருப்ப நான் சுரேஷ் தள்ளிவிட்டதில் நான் கீழே விழுந்து ஏற்பட்ட காயத்தை பயன்படுத்தி எதிரிகள் மீது தவறாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சொன்ன ஆயுதங்களால் எதிரிகள் என்னை தாக்க வில்லை என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயம் எதிரிகளால் ஏற்பட்டது அல்ல என்றால் சரியல்ல. உண்மையை திசை திருப்பவும், முன் விரோதம் காரணமாகவும் எதிரிகளுக்கு எதிராக தவறான புகார் கொடுத்து அதற்காக தவறாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கு சம்பவத்திற்கும் சம்பந்தம் அல்ல என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.50/2022**

**2025-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 10- ம் நாள் வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 3-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 3 | தொழில் | - | மாணவி |
| பெயர் | - | தீபிகா | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | சக்திவேல் | சமயம் | - | |
| கிராமம் | - | மாணிக்கா எஸ்டேட் | வயது | - | 19/2025 |
| சாதி | - | | | | |

**<u>10-10-2025</u>**

**(1, 2 எதிரிகள் ஆஜர்)**

(எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்த குவிமுச பிரிவு 311-ன் கீழான மனு Ecrlmp No. 898/2025 -ல் அனுமதிக்கப்பட்டு சாட்சி திரும்ப அழைத்து விசாரிக்கப்பட்டார்)

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

போலீசார் விசாரணையில் சம்பவத்தின் போது நாங்கள் லைட் போடும்போது அதற்கு முன்பாக எதிரிகள் லைட்டை உடைத்துவிட்டார்கள் என்று சொல்லியுள்ளேனா என்றால் சம்பவம் நடந்து நான்கு வருடம் ஆனாதல் சரியாக ஞாபகம் இல்லை. கதவை திறந்தவுடன் 1-ம் எதிரி நிஷாவும் அவரது மகன் தர்ஷனும் பாத்ரூம்பில் ஒழிந்து இருந்ததாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நிஷா அ.சா்1 னின் தலையில் அடித்தாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எனது அம்மா அ.சா.1 மயக்கம் போட்டு விழுந்தபின்பு பாட்டி கல்லாலும், கட்டையாலும் அடித்தாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். 1-ம் எதிரியின் மகனும் கட்டையால் அடித்தாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். என்னையும் எனது சிஸ்டரையும் தர்ஷன் அடித்தாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.நானும் எனது சிஸ்டரும்மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டோமா என்றால் நான் எடுக்கவில்லை எனது சிஸ்டர் எடுத்துக்கொண்டார். எனது சிஸ்டர் எந்த மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்றால் தெரியவில்லை. நிஷா எனது அம்மாவின் தலைமுடியை இழுத்து பாறையில் அடித்ததாக சொல்லியுள்ள விசாயத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எனது அம்மாவின் செயினை அறுத்துசென்றுவிட்டதாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால்

சொல்லியுள்ளேன்.இதற்குமுன்னாடி இவர்கள் வால்பாறையில் வைத்து நீ ஏன் கேசாக கொடுத்துக்கொண்டு இருக்கிறாய் என்று கொலை மிரட்டல் செய்ததாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் சொன்ன ஆயுதங்களை பயன்படுத்தி எதிரிகள் என் அம்மாவை தாக்கவில்லை என்றாலும் சுரேஷ்குமார் தள்ளிவிட்டதில் எனது அம்மாவிற்கு ஏற்பட்ட காயத்தை பயன்படுத்தி எனது அம்மா ஒரு சில விஷயங்களை திசை திருப்புவதற்காகவும் முன் விரோத்திற்காகவும் தவறாக கொடுத்த புகாருக்காக அசா.1 எனது அம்மாஎன்பதற்காக அவருக்கு ஆதரவாக நான் தவறாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கு சம்பவத்திற்கும் சம்பந்தம் அல்ல என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.